APRIL/MAY 2024

FTA22/CTA22/BTA22 — நன்னூல் – சொல்லதிகாரம்

Time : Three hours Maximum : 75 marks

SRI VANIGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE LIBRARY

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

ஓரிரு சொற்களில் விடையளிக்க.

1. திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

2. இயல்பு வழக்கு என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?

3. தெரிநிலை வினையின் இலக்கணம் யாது?

4. ஆண்பால் படர்க்கை வினைமுற்றுகள், பெண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் எவை?

5. பெயரெச்சம் என்றால் என்ன?

6. உவமைத்தொகை என்றால் என்ன?

7. ஏகார இடைச்சொல் வருமிடங்களைச் சுட்டுக.

8. சொல் என்னும் இடைச்சொல் எப்பொருளில் வரும்.

9. உரிச்சொல் என்றால் என்ன?

10. ஓரறிவு உயிர் என்றால் என்ன? அவை யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) மூவகை மொழிகள் யாவை? சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒன்றொழி பொதுச்சொல் பற்றி விளக்குக.

12. (அ) தன்மை ஒருமை வினைமுற்றுகள் எவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) பலர்பால் வினைமுற்றுகள் எவை? சான்று தருக.

13. (அ) வேற்றுமைத் தொகை என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) கால வழுவமைதி பற்றி எழுதுக.

14. (அ) ஓகார இடைச்சொல் வருமிடங்களை சான்றுடன் விளக்குக?

(அல்லது)

(ஆ) உம் என்ற இடைச்சொல் வருமிடங்களை சான்றுடன் விளக்குக.

15. (அ) ஒரு பொருள் குறித்து பல உரிச்சொல் எவை, சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) கடி என்ற உரிச்சொல் பற்றி எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.

16. வழக்கு என்றால் என்ன? எத்தனை வகைப்படும் சான்றுடன் விவரி.

17. வினைமுற்று என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.

18. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகளை சான்றுடன் விளக்குக.

19. இடைச்சொல்லின் பொது இலக்கணம் யாது? சான்றுகாட்டி விவரி.

20. உயிர்பொருள்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

———————